**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No. 238/2025**

**நாள் : 07.02.2026**

**ம.சா.** 1 படவட்டாள்

1ஆம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாணை :

விபத்து சமயத்தில் எனது மகன் அரவிந்தன் TN 83 Z 7898 என்ற ஆட்டோவில் பயணம் செய்தார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகனுடன் சேர்ந்து 5 பேர் பயணித்தார்கள். ஆட்டோ டிரைவருடன் சேர்த்து மொத்தம் 10 பேர் பயணித்தார்கள் என்றால் சரியல்ல. விபத்தின்போது ஆட்டோவின் மேல்கூரையில் ட்ரம் செட் மேலே கட்டப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. பெங்களூரில் இருந்து திருப்பத்தூர் நோக்கி அதிவேகமாக வந்த அரசு பேருந்தானது கந்திலி அருகே எனது மகன் பயணித்த ஆட்டோ மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக ஈஸ்வரன் என்பவர் சொல்லிதான் தெரிந்துக்கொண்டேன். 2ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான ஆட்டோவின் ஓட்டுநர் குடிபோதையில் வாகனத்தை ஓட்டி வந்த நிலையில் அரசு பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை நிறுத்தியதற்கு பின்னிட்டும் ஆட்டோதான் வேகமாக வந்து பேருந்தின் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து 14.06.2023ல் நடந்தது. கந்திலியியில் உள்ள செட்டியார் தோப்புக்கு அருகில் விபத்து நடந்தது. விபத்து நடந்தபோது இரவு 9.30 மணி இருக்கும். விபத்து சமயத்தில் எனது மகனின் வயது 16 ஆகும். அந்த சமயத்தில் 10 ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தான். எனது மகனின் பிறப்பு சான்றோ, பள்ளிச் சான்றோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞரிடம் கொடுததுள்ளேன்.

எனது மகன் பெயிண்ட் அடிக்கும் வேலைக்கு போனான். அத்துடன் அவ்வப்போது கூப்பிடும்போது ட்ரம் செட் குழுவோடு சேர்ந்து வேலை பார்த்து சம்பாதித்தான். அவ்வாறு மாதம் ஒன்று ரூ.35,000/- சம்பாதிப்பதை காட்டும்

ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகனின் இறுதிச்சடங்கிற்கு ரூ.1,00,000/- செலவானதாக மனுவிற்காகவேண்டி மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் போக்குவரத்து செலவுக்காக ரூ.30,000/-மும், நல்லுறவை இழந்ததற்காக ரூ.1,50,000/-, அன்பு மற்றும் பாசத்தை இழந்ததற்காக ரூ.5,00,000/- மும், எதிர்பார்த்த வாழ்வின் இழப்பிற்காக ரூ.7,00,000/-மும், எதிர்கால வருமான இழப்பிற்கு ரூ.35,00,000/- கோரியுள்ள நிலையில் மனுவிற்காக மிகைப்படுததி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ஆம் மனுதாரர் அண்ணாதுரை எனது கணவர் ஆவார். நான் 2ஆம் மனுதாரர் என்றால் சரிதான். 3ஆம் மனுதாரரான என் மகன் ஆனந்தனுக்கு திருமணமாகிவிட்டது. ஆனந்தன் வேலைக்கு சென்றுவருகிறார் என்றால் சரிதான். 4, 5 மனுதாரர்கள் பள்ளியில் படித்துக்கொண்டுள்ளார்கள். அரவிந்தின் இறப்பினால் 3 முதல் 5 மனுதாரருக்கு எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது 2ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 1ஆம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.